**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**
**TIRUVANNAMALAI.**

**S.C.No. 139/2019**

**PW11**

| | | |
|---|---|---|
| Name | : | சி. விஜயகுமார் |
| Father's/Husband's Name | : | சின்னகுழந்தை |
| Village | : | |
| Taluk/District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 25.07.2025.
Accused present.

**முதல் விசாரணை**

நான் தற்போது ஆவடி மத்திய குற்ற பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிகிறேன் . கடந்த 18.11.2017 ம் தேதி சந்தவாசல் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது காலை 09.00 மணிக்கு பணியில் இருந்த போது வாதி ரேகா என்பவர் நிலையம் வந்து கொடுத்த புகாரை பெற்று, நிலைய குற்ற எண் 472/2017, சட்டப்பிரிவுகள் 294(b), 307 இதசவின் படி வழக்கு பதிவு செய்தேன் . நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 9. புகரையும் முதல் தகவல் அறிக்கையையும் சம்பந்தப்பட்ட நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் . வழக்கு கோப்பை புலன் விசாரணைக்கு காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

ரேகா கொடுத்த புகாரில் உள்ள வாசகங்கள் ஒரு மையினாலும் , ரேகாவின் கையெழுத்து ஒரு மையினாலும் எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான் . முதல் தகவல் அறிக்கையை 18.11.2017 ம் அன்று 09.00 மணிக்கு பதிவு செய்தேன். அது அன்று இரவு 08.00 மணியளவில் நீதித்துறை நடுவரால் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான் . அச்சு படிவ

முதல் தகவல் அறிக்கையில் காலம் 14 ல் புகார் கொடுத்தவரின் கையொப்பம் பெறவில்லை என்றால் சரிதான் . காலம் 15 ல் நான் நீதிமன்றத்திற்கு அனுப்பிய நேரமும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான் . சந்தவாசல் காவல் நிலையத்திற்கும் அடுக்கம்பாறை மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கும் இடையே 19 கி.மீ தூரம் இருக்கும். பொதுவாக கொடுங்காயம் ஏற்பட்ட வழக்குகளில் மருத்துவமனையில் இருந்து காவல் நிலையத்திற்கு தகவல் கொடுக்கப்படும் என்றால் சரிதான் . இவ்வழக்கில் மருத்துவமனையில் இருந்து 17.11.2017 அன்று இரவு 11.30 மணியளவில் இன்டிமேசன் வந்தது. நான் மருத்துவமனைக்கு சென்றேன் . அப்போது நோயாளி சுயநினைவின்றி ICU வில் இருந்தார் . அவருடன் உறவினர்களோ , நண்பர்களோ யாரும் இல்லை . புகார் பெறப்பட்ட பின்பு நான் மீண்டும் மருத்துவமனை செல்லவில்லை . நான் ஆய்வாளரின் அறிவுரையின் பேரில் புகார்தாரரிடம் புகாரை பெற்று சரியாக விசாரணை செய்யாமல் வழக்கு பதிவு செய்தேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**

Additional District Judge,

Tiruvannamalai.